ஆகஸ்ட் – 06

# TNPSC துளிகள்

- பணியின் போது கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த வனச் சரகர்களை நினைவு கூரும் வகையில் ஜூலை 31 ஆம் தேதியன்று உலக வனச்சரகர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் (VOC) துறைமுகம், பசுமை ஹைட்ரஜனை வெற்றிகரமாக உற்பத்தி செய்து 1 மெகாவாட் மேற்கூரை மின் உற்பத்தித் திறனை அடைந்த முதல் இந்தியத் துறைமுகமாக மாறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## TN Rising




- தமிழ்நாடு அரசு TN Rising என்ற புதிய பிராந்திய முதலீட்டு மாநாடுகள் தொடரைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது.
- தமிழ்நாடு இங்கு ரூ.32,553.85 கோடி முதலீட்டை ஈர்த்தது.
- 'TN Rising' எனப்படும் பிராந்திய முதலீட்டு மாநாடுகள், உலகளாவியத் தொழில்துறை சக்தியாக தமிழ்நாடு மேலும் வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை உலகிற்குக் காட்ட நமக்கு ஒரு வாய்ப்பாகும்.
- இது அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் வளர்ச்சியை ஊக்குவிக்க வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது $1 டிரில்லியன் பொருளாதாரமாக மாறுவதற்கான அதன் நீண்டகாலத் தொலை நோக்குப் பார்வையின் ஒரு பகுதியாகும்.
- இது சமச்சீர் பிராந்திய வளர்ச்சி மற்றும் நிலையான தொழில்மயமாக்கலில் கவனம் செலுத்தும்.
- இதன் தொடக்க மாநாடு தூத்துக்குடியில் நடத்தப்பட்டது.

### அறிவுசார் சொத்துரிமைகளுக்கான 836 விண்ணப்பங்கள்




- இம்மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட ஏழு காப்புரிமைத் தகவல் மையங்கள் (PIC - Patent Information Centres) ஆனது தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தினால் (TNSCST) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- சேலம், பெரியார் பல்கலைக்கழகம்; கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்; கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்; சென்னையின் இந்துஸ்தான் தொழில்நுட்ப மற்றும் அறிவியல் கல்வி நிறுவனம்; கோவையின் நேரு கல்வி குழும நிறுவனங்கள்; திருச்செங்கோட்டில் உள்ள K.S ரங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரி; மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உள்ள IPR மையங்களுக்கு இந்த மையத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டன.
- புவிசார் குறியீடு பதிவுக்காக, வெவ்வேறு IPR செல்களில் ஐந்து விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
- அவை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் உள்ள IPR மையத்தில் தாக்கல் செய்யப்பட்ட வந்தவாசி கோரைப் பாய் (புல்லின் பிளவுபட்ட தண்டுகளால் நெய்யப் பட்ட பாய்), கொல்லிமலை பலாப்பழம் (பலா) மற்றும் KS ரங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரியில் கொல்லிமலை காபி, நேரு குழும நிறுவனத்தில் பொள்ளாச்சி தென்னை நார், கீழக்கரை முகமது சதக் பொறியியல் கல்லூரியில் முகவை குளியடிச்சான் சிவப்பு அரிசி (சிவப்பு நிற அரிசி வகை) ஆகியனவாகும்.


## தேசியச் செய்திகள்

### இந்திய மீன் உற்பத்தி

- சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய மீன் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உள்ளது.
- உலகளாவிய மீன் உற்பத்தியில் இந்தியா சுமார் 8% பங்கைக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் நதிசார்/உள்நாட்டு மீன் உற்பத்தி மொத்த மீன் உற்பத்தியில் சுமார் 75%

ஆகும்.

- நதிசார்/உள்நாட்டு மீன்வளத் துறையானது நாட்டில் பெரும்பாலும் மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ளது.
- கடல் சார் மீன் வளத் துறை ஆனது மத்திய மற்றும் கடலோர மாநில அரசுகளுக்கு இடையே பகிரப்பட்டப் பொறுப்பாக உள்ளது.
- மீன்வளம் ஆனது தேசிய மொத்த மதிப்புக் கூட்டலில் (GVA) சுமார் 1.12 சதவீதமாகும்.
- மேலும் இது வேளாண்மையின் மொத்த மதிப்புக் கூட்டலில் 7.26 சதவீதத்தைக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் கடல் சார் மீன் பிடிப்பு 2024 ஆம் ஆண்டில் இரண்டு சதவீதம் குறைந்து 3.47 மில்லியன் டன்களாக இருந்தது.
- இது கொச்சியில் உள்ள மத்திய கடல்சார் மீன் வள ஆராய்ச்சி நிறுவனத்தினால் (CMFRI) வழங்கப்பட்ட தகவல் ஆகும்.
- குஜராத் மாநிலத்தில் இந்த ஆண்டு 754,000 டன்கள் என்ற அளவில் அதிக அளவு மீன் பிடிப்பு பதிவாகியுள்ளது.




- அதைத் தொடர்ந்து முறையே தமிழ்நாடு 679,000 டன்களுடன் மற்றும் கேரளா 610,000 டன்களுடன் இடம்பெற்றுள்ளன.
- இந்திய கானாங்கெளுத்தி இனமானது, இந்த மீன் பிடிப்புப் பட்டியலில் சுமார் 263,000 டன்களுடன் முதலிடத்திலும், எண்ணெய் மத்தி மீன் பிடிப்பு சுமார் 241,000 டன்களுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் தவிர, மேற்கு கடற்கரைப் பகுதியில் ஒட்டு மொத்தமாக மீன் பிடிப்பு குறைந்தாலும், கிழக்கு கடற்கரையில் அது அதிகரித்து வரும் போக்கு காணப்பட்டது.
- முந்தைய ஆண்டை விட மகாராஷ்டிராவில் 47 சதவீத வளர்ச்சிப் பதிவாகியுள்ளது.
- மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் ஒடிசா ஆகியன முறையே 35 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 18 சதவீதம் என்ற அளவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக்

கண்டன.

- டானா, ஃபெங்கல், ரெமால் மற்றும் அஸ்னா போன்ற புயல்கள் பெருமளவில் மீன்பிடி நடவடிக்கைகளைக் கணிசமாகப் பாதித்தன.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளாவில் அதிகரித்த வெப்ப அலை நாட்கள் மீன்பிடி நடவடிக்கைகளை மேலும் பாதித்தன.
- இந்தியாவில் கடல் சார் மீன் உற்பத்தி செய்யும் மிகப்பெரிய மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் உள்ளது.
- நாட்டில் கடல் சார் மீன் உற்பத்தி செய்யும் இரண்டாவது பெரிய மாநிலமாக குஜராத் உள்ளது.
- இந்தியாவில் மிகப்பெரிய அளவில் நதிசார் மீன் உற்பத்தி செய்யும் மாநிலமாகவும் ஆந்திரப் பிரதேசம் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் இடம் பெற்றுள்ளது.

## இந்தியாவில் உறுப்பு தானங்கள் 2024

- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 18,900 உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் பதிவாகியுள்ளன.
- உலகளவிலான மொத்த உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- உயிருள்ள போதே உடல் உறுப்பு தானம் செய்பவர்களை கொண்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- கை மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா தற்போது உலகிலேயே முன்னணியில் உள்ளது.
- “அங்தான் - ஜீவன் சஞ்சீவானி அபியான்” திட்டத்தின் கீழ், இந்தியா ஒவ்வொரு ஜூலை மாதமும் உறுப்பு தான மாதத்தைக் கடைப்பிடிக்கிறது.
- இந்தியா ஒரு மில்லியன் மக்கள்தொகையில் 1 என்ற அளவிற்கும் குறைவான அளவில் இறந்தவர்களின் உறுப்பு தான விகிதத்தை கொண்டுள்ளது.
- ஸ்பெயினில் இது ஒரு மில்லியன் மக்கள்தொகைக்கு 48 பேர் என்ற எண்ணிக்கையில் உள்ளனர்.
- உறுப்பு தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சையானது மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994 என்ற ஒரு சட்டத்தால் கட்டுப்படுத்தப் படுகிறது.
- இது 2011 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.
- இது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான சடல உறுப்பு தானத்தில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது
- 2024 ஆம் ஆண்டில் 268 சடல உறுப்பு தானங்களைப் பதிவு செய்ததற்காக மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு தேசிய விருது வழங்கி அங்கீகரித்துள்ளது.
- அரசு மருத்துவமனைகளில் 146 பேரும், தனியார் மருத்துவமனைகளில் 122 பேரும் உறுப்பு தானம் மேற்கொண்டனர்.
- இது நாட்டிலேயே மிக அதிக எண்ணிக்கையாகும்.
- இந்த எண்ணிக்கையானது, 2008 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் உறுப்பு தானத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இம்மாநிலத்தின் அதிகபட்ச வருடாந்திர மொத்தப் பதிவு

ஆகும்.


- 2024 ஆம் ஆண்டில் உடல் உறுப்பு தானத்தில் புதுச்சேரி முன்னணி ஒன்றியப் பிரதேசமாக இருந்தது.
- சடல உறுப்பு தான விகிதத்தை அதிகமாகக் கொண்ட தெலுங்கானா மாநிலத்திற்கும் அங்கீகாரமளிக்கப்பட்டது.




## 71வது தேசிய திரைப்பட விருதுகள் 2023

- புது டெல்லியில் அறிவிக்கப்பட்ட 71வது தேசிய திரைப்பட விருதுகளில் 12th Fail திரைப் படமானது, சிறந்த திரைப்பட விருதை வென்றது.
- Flowering Man சிறந்த முழு நீளத் திரைப்படத்திற்கான விருதையும், God Vulture and Human சிறந்த ஆவணப்படத்திற்கான விருதையும் பெற்றன.
- ஜவான் திரைப்படத்திற்காக ஷாருக்கான் மற்றும் 12th Fail திரைப்படத்திற்காக விக்ராந்த் மாஸி ஆகியோருக்கு முன்னணி சிறந்த நடிகருக்கான விருது வழங்கப் பட்டது.
- Mrs Chatterjee Versus Norway திரைப்படத்தில் நடித்ததற்காக இராணி முகர்ஜி சிறந்த முன்னணி நடிகைக்கான விருதை வென்றார்.
- விஜயராகவன் மற்றும் முத்துப்பேட்டை சோமு பாஸ்கர் சிறந்த துணை நடிகருக்கான விருதைப் பெற்றனர்.
- ஊர்வசி மற்றும் ஜான்கி போடிவாலா ஆகியோர் சிறந்த துணை நடிகைக்கான விருதைப் பெற்றனர்.
- இயங்குபடம், மெருகுக் காட்சிகள், விளையாட்டு மற்றும் கேலிச் சித்திரம் (AVGC) பிரிவில் ஹனுமான் சிறந்த படமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- Giddh The Scavenger சிறந்த குறும்படத்திற்கான விருதைப் பெற்றது.
- தமிழ் திரைப்படமான பார்க்கிங் சிறந்த துணை நடிகர், சிறந்த திரைக்கதை மற்றும் சிறந்த தமிழ் திரைப்படம் பிரிவு ஆகிய மூன்று விருதுகளை வென்றது.
- G.V. பிரகாஷ் குமார் சிறந்த இசை இயக்குனர் (பாடல்கள்) பிரிவில் விருதினை வென்று உள்ளார்.

- 2020 ஆம் ஆண்டில் சூரரைப் போற்று திரைப்படத்திற்காக அவர் ஏற்கனவே தேசிய விருதை வென்றுள்ளார்.




## INS ஹிம்கிரி 2025




- இந்தியக் கடற்படையானது கொல்கத்தாவில் மேம்பட்ட வழிகாட்டப்பட்ட எறிகணை தாங்கிய போர்க்கப்பலான INS ஹிம்கிரி கப்பலைப் பெற்றது.
- ஹிம்கிரி என்பது 17A திட்டத்தின் மூன்றாவது கப்பலாகும். மேலும் போர்க்கப்பல் வடிவமைப்பு வாரியம் (WDB) வடிவமைத்த GRSE நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட அதன் வகுப்பில் முதல் கப்பலாகும்.
- இந்தக் கப்பலில் வான் வழி மேற்பரப்பு மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் போர்த் திறனுடன் பிரம்மோஸ் சீர்வேக எறிகணைகள் மற்றும் பராக் 8 ஆனது வான் வழிப் பாதுகாப்பு எறிகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.
- 30 ஆண்டு கால சேவைக்குப் பிறகு 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் படையில் இருந்து நீக்கப்பட்ட லியாண்டர் வகுப்பு போர்க்கப்பலான INS ஹிம்கிரியின் பெயரை ஹிம்கிரி மீண்டும் பெறுகிறது.

## கவாச் 4.0




- டெல்லி முதல் மும்பை வரையிலான பாதையில் மதுரா முதல் கோட்டா வரையிலான பிரிவில் கவாச் 4.0 பாதுகாப்பு அமைப்பை இந்திய இரயில்வே நிர்வாகம் நிறுவியுள்ளது.
- கவாச் 4.0 என்பது ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தரநிலைகள் அமைப்பினால் (RDSO) அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தானியங்கி இரயில் பாதுகாப்பு அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது இரயில் நடவடிக்கைகளில் மிக உயர்ந்த உலகளாவிய பாதுகாப்பு தரமான நான்காவது பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நிலையில் (SIL 4) வடிவமைக்கப் பட்டுள்ளது.
- கவாச் 4.0, குறைந்தப் புலனாகும் / தெரிவுநிலை நிலைகளிலும் கூட, இரயில் என்ஜின் கட்டுப்பாட்டு அறையில் தானியங்கி வேக நிறுத்த அமைப்பு மற்றும் சமிக்ஞை ஒளிகளின் புலனாகும் நிலையைச் செயல்படுத்துகிறது.

## NCMM திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்

- சுரங்க அமைச்சகமானது (MoM) தேசிய முக்கிய கனிமங்கள் திட்டத்தின் (NCMM) கீழ் ஏழு நிறுவனங்களைச் சிறப்பு மையங்களாக (CoE) அங்கீகரித்துள்ளது.
- இந்தச் சிறப்பு மையங்களில் (CoE) நான்கு இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் (IIT) மற்றும் மூன்று ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) ஆய்வகங்கள் அடங்கும்.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், ஐதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், இந்திய தொழில்நுட்ப நிறுவனம் இந்திய சுரங்கப் பள்ளி தன்பாத், ரூர்க்கேயின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், CSIR - IMMT புவனேஸ்வர், CSIR NML ஜாம்ஷெட்பூர் மற்றும் NFTDC ஐதராபாத் ஆகியன அங்கீகரிக்கப் பட்ட நிறுவனங்கள் ஆகும்.
- இந்த CoE மையங்கள், தூய்மையான ஆற்றல், இயக்கம்/போக்குவரத்து மாற்றம், மின்னணுவியல், பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறைகளுக்கு மிகவும் அவசியமான

முக்கியமான கனிமங்களில் இந்தியாவின் திறன்களை மேம்படுத்த என புதுமையான மற்றும் மாற்றத்தக்க ஆராய்ச்சியை மேற்கொள்ளும்.




## பிரதான் மந்திரி மித்ரா திட்டத்தின் கீழ் ஜவுளி பூங்காக்கள்




- பிரதான் மந்திரி மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆயத்த ஆடை (PM மித்ரா) திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் ஏழு ஜவுளிப் பூங்காக்கள் நிறுவப்பட உள்ளன.
- இந்தப் பூங்காக்கள் ஒவ்வொன்றும் மூன்று லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி ஜவுளித் துறையில் ஏற்றுமதி மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களாவன: தமிழ்நாட்டில் விருதுநகர், குஜராத்தில் நவ்சாரி, கர்நாடகாவில் கலபுரகி, மத்தியப் பிரதேசத்தில் தார், உத்தரப் பிரதேசத்தில் லக்னோ, தெலுங்கானாவில் வாரங்கல் மற்றும் மகாராஷ்டிராவில் அமராவதி ஆகியனவாகும்.
- இதில் ஐந்து பூங்காக்கள் புதிய, எந்தவித வளர்ச்சியுமில்லாத இது வரையில் எந்தவித கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படாத நிலத்தில் கட்டப்பட உள்ள பசுமைத் திட்டங்களாகும், மேலும் மற்ற இரண்டு பூங்காக்கள் மறுபயன்பாட்டுத் தொழில்துறை நிலத்தில் அதாவது இதற்கு முன்னதாக குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலத்தில் அமைக்கப்பட உள்ளன.
- ஒவ்வொரு பூங்காவிலும் நவீன ஜவுளி நடைமுறைகளில் தொழிலாளர் திறன்களை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சி மையங்கள், சோதனை ஆய்வகங்கள் மற்றும்

பயிற்சி மையங்கள் நிறுவப்படும்.

- PM MITRA (மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பகுதி மற்றும் ஆயத்த ஆடை) பூங்காக்கள் திட்டம் ஆனது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கப்பட்டது.

## சஞ்சார் மித்ரா திட்ட விரிவாக்கம்




- தொலைத்தொடர்புத் துறையானது (DoT) சஞ்சார் மித்ரா திட்டத்தினை ஒரு சோதனை ரீதியானத் திட்டம் என்ற நிலையிலிருந்து ஒரு தேசியத் திட்டமாக விரிவுபடுத்தி உள்ளது.
- சஞ்சார் மித்ராக்கள் எனப்படும் மாணவச் சமூகம் சார்ந்த தன்னார்வலர்கள் டிஜிட்டல் பாதுகாப்பு, இணைய வெளி மோசடி, மின்காந்தக் கதிர்வீச்சு மற்றும் பொறுப்பான கைபேசிப் பயன்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள்.
- தேசியத் தகவல் தொடர்பு கழக தொழில்நுட்பம் (NCAT) மற்றும் தொலைத்தொடர்புத் துறையின் ஊடகப் பிரிவினால், ஐந்தாம் தலைமுறை நுட்பத்திலான, ஆக்கமிக்கச் செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையவெளிப் பாதுகாப்பு போன்ற மேம்பட்ட தொலைத்தொடர்புத் துறைகளில் தன்னார்வலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.


## அப்னா கர் முன்னெடுப்பு

- நெடுஞ்சாலைகளில் லாரி ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான ஓய்வு இடங்களை வழங்குவதற்காக என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் அப்னா கர் முன்னேடுப்பினைத் தொடங்கியது.
- அரசு எண்ணெய் நிறுவனங்களால் முந்நூற்று அறுபத்தெட்டு ஓய்வு மையங்கள் கட்டப் பட்டுள்ளன.
- தங்குமிடங்கள், சுத்தமான கழிப்பறைகள், குளியல் பகுதிகள், உணவகங்கள், சமையல் மண்டலங்கள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆகியவை இந்த வசதிகளில் அடங்கும்.

- தேசியத் தளவாட முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக ஓட்டுநர் நலனை மேம்படுத்துவதையும் சிறந்த நெடுஞ்சாலை உள்கட்டமைப்பை ஆதரிப்பதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பிரதான் மந்திரி தேசிய டயாலிசிஸ் திட்ட விரிவாக்கம்




- இந்திய அரசானது, பிரதான் மந்திரி தேசிய கூழ்மப் பிரிப்பு/டயாலிசிஸ் திட்டத்தினை (PMNDP) விரிவுபடுத்தியுள்ளது.
- தற்போது இது 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 751 மாவட்டங்களை உள்ளடக்கியது.
- ஜூன் 30 ஆம் தேதி நிலவரப்படி, இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தம் 1,704 டயாலிசிஸ் மையங்கள் செயல்படுகின்றன.

- PMNDP இரத்தக் கூழ்மப் பிரிப்பு (ஹீமோ டயாலிசிஸ்) மற்றும் அடிவயிற்றுப் பகுதி கூழ்மப் பிரிப்பு (பெரிட்டோனியல் டயாலிசிஸ்) மூலம் இறுதிக் கட்டச் சிறுநீரகச் செயலிழப்பு நோயாளிகளுக்கு இலவச டயாலிசிஸ் சேவைகளை வழங்குகிறது.
- பிரதான் மந்திரி தேசிய டயாலிசிஸ் திட்டம் (PMNDP) 2016 ஆம் ஆண்டில் தேசிய சுகாதார திட்டத்தின் (NHM) ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.

## AI அடிப்படையிலான வேளாண் வானிலையியல் ஆலோசனை




- ஹைதராபாத்தில் உள்ள பகுதியளவு வறண்ட வெப்பமண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் (ICRISAT) சிறு விவசாயிகளுக்கு செயற்கை நுண்ணறிவில் இயங்கும் பருவநிலை ஆலோசனை அமைப்பினை அறிமுகப்படுத்தியது.
- இந்தத் திட்டமானது செயற்கை நுண்ணறிவில் இயங்கும் சூழல் சார்ந்த வேளாண் வானிலையியல் ஆலோசனை சேவைகள் பருவநிலைக்கு ஏற்ற தகவமைப்பு கொண்ட வேளாண்மை என்று அழைக்கப்படுகிறது.
- இது இந்திய அரசாங்கத்தின் பருவமழை திட்டம் III என்ற திட்டத்தினால் ஆதரிக்கப் படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்


## புதிய டிஜிட்டல் ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டு முறை

- ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆனது பாரம்பரிய ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டு ஒட்டு முத்திரைகளுக்குப் பதிலாக இரு பரிமாண (2D) பட்டைக் குறியீடு எனப்படும் பாதுகாப்பான டிஜிட்டல் வழி பட்டைக் குறியீட்டினை அறிமுகப்படுத்த உள்ளது.
- இந்தியப் பயணிகள் ஆவணங்களைப் பதிவேற்றுதல், நுழைவு இசைவுச் சீட்டுக் கட்டணங்களை செலுத்துதல், அதன் அங்கீகார நிலையைக் கண்காணித்தல் மூலம் முழுமையாக இயங்கலையில் விண்ணப்பித்து மின்னணு வழியில் கையொப்பமிடப் பட்ட நுழைவு இசைவுச் சீட்டினைப் பெறலாம்.
- முதல் முறையாக விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமே நேரடி உயிரியளவியல் அம்சங்களின் சமர்ப்பிப்பு தேவைப்படும், ஆனால் அடிக்கடி பயணிப்பவர்கள் மிகவும் விரைவான செயலாக்கத்தின் மூலம் பயனடைவார்கள்.

- கைரேகை மற்றும் முக அங்கீகாரத்தைப் பயன்படுத்தும் நுழைவு - வெளியேற்ற அமைப்பு (EES) 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் கடவுச்சீட்டு முத்திரைகளுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்படும்.
- நுழைவு இசைவுச் சீட்டு விலக்கு பெற்றப் பயணிகளுக்கான ஐரோப்பிய பயண தகவல் மற்றும் அங்கீகார அமைப்பு (ETIAS) 2026 ஆம் ஆண்டிற்குள் தொடங்கப்படும்.





## டோர்ஜிலுங் திட்டம் – பூடான்




- பூடானில் 1125 மெகாவாட் (MW) திறன் கொண்ட டோர்ஜிலுங் நீர்மின் நிலையத்தின் கட்டுமானம் ஆனது சாலைகள் மற்றும் பாலங்கள் போன்ற சில உள்கட்டமைப்புப் பணிகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.
- டாடா பவர் ஆஃப் இந்தியா நிறுவனமானது பூடானின் ட்ரூக் கிரீன் பவர் கார்ப்பரேஷன் (DGPC) நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளதோடு இது பன்னாட்டளவில் தூய்மையான ஆற்றலில் ஒரு பெரிய தனியார் துறையின் ஈடுபாட்டினைக் குறிக்கிறது.
- உலக வங்கியால் நிதியளிக்கப்படுகின்ற இந்தத் திட்டத்திற்கு சுமார் 1.7 பில்லியன் அமெரிக்க டாலர் அல்லது சுமார் 150 பில்லியன் பூடானிய குல்ட்ரம் (Nu) செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம், மோங்கரில் அமைந்துள்ள ஓர் அணை மற்றும் லுயென்ட்சே மாவட்டத்தில் நீண்டு காணப்படும் ஒரு நீர்த்தேக்கத்துடன் ஆறு விசையாழிகளைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் மணிக்கு 4.5 டெராவாட் (TWh) மின்சாரத்தினை உற்பத்தி செய்யும்.

- டாடா பவர் மற்றும் DGPC ஆகியவை இணைந்து பூடானில் சூரிய சக்தி மற்றும் பிற முக்கிய நீர்மின் நிலையங்கள் உட்பட 5000 மெகாவாட் அளவிலான தூய்மையான ஆற்றலை உருவாக்கும்.

## மியான்மரில் புதிய இடைக்கால அரசாங்கம்





- சீனியர் ஜெனரல் மின் ஆங் ஹ்லைங் செயல் தலைவராகவும் படைத்தளபதியாகவும் தனது கட்டுப்பாட்டைத் தக்க வைத்து, மியான்மரின் இராணுவமானது அதிகாரப் பூர்வமாக அதன் அதிகாரத்தினைப் பொதுமக்கள் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்திற்கு மாற்றியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு நாடு தழுவிய அவசரநிலை நீக்கப் பட்டது, ஆனால் வன்முறை அபாயங்கள் காரணமாக 60க்கும் மேற்பட்ட நகரங்களில் இராணுவச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது.
- இங்கு திட்டமிடப்பட்ட தேர்தலுக்கான வாக்களிப்பு ஆனது டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பல பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு கட்டங்களாக நடைபெறும்.

## கியோட்டோ நெறிமுறையின் செல்லுபடி காலம்


- சர்வதேச நீதிமன்றம் (ICJ) ஆனது 2015 ஆம் ஆண்டு பாரிசு உடன்படிக்கை இருந்த போதிலும் 1997 ஆம் ஆண்டு கியோட்டோ நெறிமுறை சட்டப்பூர்வமாகச் செல்லுபடி ஆகும் என்று தீர்ப்பளித்தது.
- சர்வதேச சட்டத்தின் கீழ் உலக நாடுகள் கியோட்டோ நெறிமுறையின் விதிகள் மற்றும் உமிழ்வு இலக்குகளுக்கு இணங்க வேண்டும்.
- இந்த நெறிமுறையின் முதல் உறுதிப்பாட்டுக் காலம் 2008 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலும், இரண்டாவது உறுதிப்பாட்டுக் காலம் 2012 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் இருந்தது.

- இங்கு பாரிசு உடன்படிக்கையானது கியோட்டோ நெறிமுறையை நிறுத்தவில்லை என்றாலும் 2020 ஆம் ஆண்டிற்குப் பிறகு புதிய உறுதிப்பாட்டுக் காலம் எதுவும் நிர்ணயிக்கப் படவில்லை.
- கியோட்டோ நெறிமுறையுடன் இணங்காதது சர்வதேச அளவில் தவறான செயலாகக் கருதப்படலாம்.
- ICJ தீர்ப்பு ஆனது ஆலோசனை சார்ந்தது மற்றும் உலகளவில் பருவநிலைப் பொறுப்பு உணர்வை அதிகரிப்பதற்கும் வழக்குத் தொடரவும் வழி வகுக்கும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சிமோன் AI





- விண்வெளி வீரர் குழுவுடனான உரையாடல்களை மேற்கொள்ளும் நடமாடும் எந்திரம் (சிமோன்) என்பது சர்வதேச விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்களுக்கு ஆதரவளிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நுண்ணறிவு எந்திரம் (ரோபோ) ஆகும்.
- இந்தத் திட்டமானது, பணிச்சுமையைக் குறைத்தல், நேரத்தின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் நீட்டிக்கப்பட்ட விண்வெளிப் பயணங்களின் போது மன அழுத்தத்தைக் குறைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- சிமோன் விண்வெளி நிலையத்திற்குள் சுதந்திரமாகச் செயல்பட்டு, நடைமுறைகள் மற்றும் தகவல்களை எளிதாக அணுகுவதற்காக கை இயக்கமின்றி குரல் வழிக் கட்டுப்பாடு மூலம் செயல்படுகிறது.

- பராமரிப்பு மற்றும் சோதனைகளின் போது படிப்படியான வழிமுறைகள் அல்லது ஒளிப்படங்களைக் காண்பிப்பதன் மூலம் சிமோன் விண்வெளி வீரர்களுக்கு உதவுகிறது.
- அறிவியல் பணிகளின் நேரடி அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணப்படுத்தலுக்கான நடமாடும் ஒளிப்படக் கருவியாக இது செயல்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## குழிநரிப் பூச்சி இனங்கள்




- மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கேரளாவில் முதன்முறையாக பால்பரினி குழுவினைச் சேர்ந்த மூன்று குழிநரிப் பூச்சி இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இங்கு பதிவு செய்யப்பட்ட இனங்கள் இந்தோபால்பேர்ஸ் பார்டஸ், பால்பரேஸ் கான்ட்ராரியஸ் மற்றும் ஸ்டெனாரெஸ் ஹார்பியா ஆகும்.
- மலப்புரம் மாவட்டத்தில் உள்ள வாழையூரில் இந்தோபால்பரேஸ் பார்டஸ் கண்டறியப் பட்டது.
- இது முன்னதாக பீகார், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசாவில் பதிவு செய்யப்பட்டது.
- கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் பால்பரேஸ் கான்ட்ராரியஸ் பரவல் இதற்கு முன் பதிவானது.
- ஸ்டெனாரஸ் ஹார்பியா முன்னதாக தமிழ்நாடு மற்றும் தெலுங்கானாவில் மட்டுமே காணப்பட்டது என்பதோடு பத்தனம் திட்டாவில் உள்ள கவி, திருநெல்லி மற்றும் இடுக்கியில் உள்ள வல்லக் கடவு ஆகிய இடங்களில் கண்டறியப் பட்டது.

## டெப்ரிகர் வனவிலங்கு சரணாலயத்தில் புலிகள்

- ஒடிசா அரசானது, பர்கர் மாவட்டத்தில் உள்ள டெப்ரிகர் வனவிலங்கு சரணாலயத்தில் புலிகளை அறிமுகப்படுத்த உள்ளது.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்திடமிருந்து (NTCA) வனத்துறைத் தொழில்நுட்ப அனுமதியைப் பெற்றது.

- ஒடிசாவின் சமீபத்திய புலிகளின் எண்ணிக்கையானது, முக்கியமாக சிமிலிபால் புலிகள் காப்பகத்தில் 30 வங்காளப் புலிகள் உள்ளதைக் குறிக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## லேண்ட்ரேஸ் விதைக் கொள்கை




- ஒடிசா மாநில அரசானது, லேண்ட்ரேஸ் எனப்படும் பாரம்பரிய விதை வகைகளை முறையான விதை முறைகளில் ஒருங்கிணைக்க ஒரு சீர்தர இயக்க முறையை (SOP) அறிமுகப்படுத்தியுள்ளது.
- வேளாண் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாப்பதையும், விவசாயிகளின் அறிவு மற்றும் சமூக விதை முறைகளுக்குப் பெரும் முன்னுரிமை அளிப்பதன் மூலம் சிறு விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதையும் SOP நோக்கமாகக் கொண்டுள்ளது.
- லேண்ட்ரேஸ்கள் உள்ளூர் வேளாண் சார் பருவநிலையின் சூழல்களுக்கு ஏற்றவாறு மரபணு ரீதியாக வேறுபட்ட பாரம்பரியப் பயிர் வகைகளாகும் என்பதோடு மேலும் இவை பருவ நிலை மீள்தன்மை, பூச்சிகளுக்கு எதிரான சகிப்புத்தன்மை மற்றும் ஊட்டச்சத்து செழுமை போன்ற பண்புகளைக் கொண்டுள்ளன.

- இந்த முன்னெடுப்பானது பருப்பு வகைகள், கிழங்குகள், தானியங்கள் மற்றும் பிற பாரம்பரிய பயிர்களை உள்ளடக்கிய முந்தைய சிறு தானியம் சார்ந்த முன்னெடுப்புகளை விரிவுபடுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★